International Journal of Applied Research 2019; 5(12): 79-82




**ISSN Print:** 2394-7500
**ISSN Online:** 2394-5869
**Impact Factor:** 5.2
IJAR 2019; 5(12): 79-82
www.allresearchjournal.com
Received: 04-10-2019
Accepted: 06-11-2019

**முனைவர்இரா. விமலாதேவி,**
உதவிப்பேராசிரியர்,
செல்லம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை

**Correspondence Author:**
**முனைவர்இரா. விமலாதேவி,**
உதவிப்பேராசிரியர்,
செல்லம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை

# முனைவர்ஜேஆர். இலட்சுமிஅவர்களின் தாராசுரம் ஐராவதீச்சுரம் சிற்பங்கள் - பார்வை

## முனைவர்இரா. விமலாதேவி

தமிழ்நாட்டில் கற்கோவில்கள் பலவற்றை அமைத்த பெருமை சோழர்க்கே உரியது. கயிலாச நாதர் கோவில், பரமேசுவரவர்மன் கட்டிய கூரத்துச் சிவன் கோயில் ஆகியவற்றைக் கண்ட பிற்காலச் சோழர்கள் வானளாவிய விமானங் கொண்ட கோயில்களைக் கட்டினர்[1]. கோவில்களில் உள்ள பலவகைச் சிற்பங்களைக் கொண்டு சோழர்களின் சிற்பக்கலை உணர்வை அறியலாம். இவ்வகையில் பிற்காலச் சோழரான விசயாலயச் சோழனால் நிர்மாணிக்கப்பட்ட பழையாறை மாநகரின் ஒரு பகுதியில் அமைந்துள்ளது. இராச இராச ராசசேச்சுரம் என்னும் ஐராவதீச்சுரம் கோயிலாகும். காலத்தை வென்று கல்லிலே நிற்கும் கலை வண்ணமாகத்திகழும் இக்கோயில் வார்த்தைகளில்வடிக்க முடியாத எழில் மிகு வேலைப்பாடுகளுடன் கூடிய அறிய சிற்பங்களைக் கொண்டுள்ளது

இது தமிழ் நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திற்கு அருகில் முன்றுமைல் தொலைவில் உள்ளது.இராசஇரா சேச்சுரம் என்பது தராசுரமாக கல்வெட்டுக்களாலும் சமகாலத்து நூல்களாலும் அறிய முடிகிறது. இக்கோயிலின் தலபுராண வரலாற்றில் துரவாச முனிவரின் சாபத்தால் தன்வெண்மையை இழந்த இந்திரன்களிறு ஐராவதம் இக்கோயில் குளத்தில் முழ்கி சம்பம் நிங்கபெற்றதாக குறிப்புள்ளது[2]. இத்தகைய தாராசுரம் ஐராவதீச்சுரம் கோயிலின் சிற்பங்கள் குறித்து முழுமையாக சிறந்த முறையில் ஆராய்ந்து முனைவர் ஜே ஆர். இலட்சுமி அவர்கள் தராசுரம் ஐராவதீசுவரம் என்னும் இந்நூலை எழுதியுள்ளார். அந்நூலின் சிறப்புகள் குறித்து இந்நூலின் இக்கட்டுரையில் காணலாம்.

இந்நூலில் முதல் பகுதியில் சோழர்கால வரலாறும், இலக்கியங்களும், இரண்டாவதில் காலந்தோறும் சிற்பங்களும், மூன்றாம் பகுதியில் சிற்பங்களின் முத்திரைகளும் தத்துவங்களும், நான்காவதில் தாராசுரம் ஐராவதீச்சுரம் சிற்பங்களில் ஆடல்

மகளிரின் அபிநயங்கள், ஐந்தாவது பகுதியில் சிற்பங்களில் பெரிய புராண நிகழ்ச்சிகள், கடைசிப் பகுதியில் தாராசுரம் ஐராவதீச்சுரம் சிற்பங்களில் நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளும் சிற்பங்களின் நுணுக்கங்களும் என ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் தொன்மையான பழம்பெருமை மிக்க அரச மரபினர் சோழ மரபினர் சோழர் காலத்தில் கலை, இலக்கியம், பண்பாடு ஆகிய அனைத்தும் புத்துயிர் பெற்றன. இலக்கியங்கள், இலக்கண நூல்கள் சமயத் தத்துவங்கள், கண்களுக்கு விருந்து படைக்கும் கலைப்படைப்புகள் என ஒவ்வொன்றும் தமிழர் மரபின் புதிய முத்திரை படைத்தன.

சோழர்கால வரலாறும் இலக்கியங்களும்.

விசயாலயச சோழன் (கிபி 848 - 881) தொடங்கி முதலாம் ஆதித்த சோழன், பரகேசரி முதலாம் பராந்தகன எனத் தொடர்ந்த சோழப் பரம்பரை தங்கள் பகுதியை வெற்றியின் மூலம் விரிவாக்கிக் கொண்டது மட்டுமல்ல, கலை இலக்கிய வளர்ச்சிக்கும் முக்கிய பங்காற்றியுள்ளனர். அரிஞ்சயன் சோழன் நினைவாக மேற்பாடி என்னும் ஊரில் முதலாம் இராசராசன் அரியேச்சுரம் எனும் கோயிலை உருவாக்கினான். அக்கோயிலே தற்போது சோழேச்சுரம் என அழைக்கப்படுகிறது

கலிங்கத்துப் பரணியில் நவிலை சோழன் ஆயிரம் யானைகள் கவர்ந்து வந்ததை

“தண்ட நாயகர் காக்குந விலையிற்
கொண்ட வாயிரங் குஞ்சரமல்லவோ”

எனச் சோழன் குறித்து இலக்கியங்களில் இடம் பெறும் குறிப்புகளும் விவரிக்கப்பட்டுள்ளன.

சோழர் கால வடமொழிக் கல்லூரிகளில் சமயப் பாடங்கள் தவிர சரகர், வாகப்பட்டர் முதலியோர் எழுதிய மருத்துவ நூல்களும் கற்பிக்கப்பட்டன என்ற செய்தி வியப்பூட்டுவதாகும். தமிழர் நாகரிகம் சோழ அரசர்களால் மிகவும் உயர்ந்த நிலையை அடைந்தது. தென்னிந்தியா முழுவதும் ஒரே ஆட்சிக்கு உட்பட்டு சுமார் 300 வருடங்கள் ஆளப்பட்டன. இத்தகைய சோழ பரம்பரையினரை பற்றி விளக்குவதாக முதல் இயல் அமைந்துள்ளது.

**காலந்தோறும் சிற்பங்கள்**

சிற்பங்கள் புடைப்புச்சிற்பம், குடைவுச்சிற்பம், நினைவுச்சிற்பம், உருவச்சிற்பம் எனச் சிற்பத்தின் வடிவத்தை ஒட்டியும், பயனை ஒட்டியும் வகைப்படுத்தலாம்.

மனித உடலினை அல்லது அதன் அழகை இயற்கையாகவே உள்ளதுபோல் காட்டுவதில் வேறெந்தக் கலையையும் விடச் சிற்பமே தனிச்சிறப்புடையது.

தொட்டுணரத்தக்க கலை சிற்பக்கலை

இப்படித் தொடுபுலன் உணர்வை இலக்கியம், சித்திரம், இசை, நடனம், நாட்டியம்

என வேறு எந்தக் கலையும் வழங்குவதில்லை என்கிறார் தமிழ்நாடன்.

தமிழ் இலக்கியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, மதுரைக் காஞ்சியில் இடம் பெரும் சுதைச் சிற்பங்கள் பற்றியும் கோயில்களில் தெய்வ உருவங்கள் மண்ணினாலும்,கல்லினாலும், மரத்தினாலும் அமைந்திருந்ததை இவ்வியலில் விளக்கியுள்ளார் ஆசிரியர். புகழ்பெற்ற கோயில்களில் அமைந்திருந்த பல்லவர் காலச் சிற்பங்கள் குறித்தும், சோழர் காலச் சிற்பங்கள் குறித்தும் விளக்கப்பட்டுள்ளன.

சிற்பங்களின் முத்திரைகளும் தத்துவம்

இவ்இயலில் சிற்பங்களில் காண 32 வகையான கை அமைதிகள் பற்றி விளக்கப்பட்டுள்ளன. நாட்டியத்தில் அபிநயிக்கும் முத்திரைகள் எவ்விதம் மேம்படுத்தப்பட்டு சிற்பங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன என விளக்கப்பட்டுள்ளது.

சிற்பியானவன் ஆடற்கலை இலக்கணத்தை நன்குணர்ந்து தன்னழகுணர்ச்சியுடன் எப்பொருளில் எவ்விடத்தில் அமைக்கிறோமோ அதற்கு ஏற்றவாறு கைகளையும் கால்களையும் வளைத்து நெளித்து பார்ப்போர் கலையழகை உணருமாறு செய்துவிடுகிறார்.

கைவிரல்களை நீட்டுதல், மடக்குதல், கூட்டுதல், விலக்குதல், குவித்தல் ஆகிய ஐந்து நிலைகளை அடிப்படையாக கொண்டே கைஅமைதிகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு கைஅமைதி அமைந்துள்ள விதம் மட்டுமின்றி அவை உணர்த்தும் பொருளும் விளக்கப்பட்டுள்ளன. தர்ஜன் முத்திரையைக் குறிப்பிடும்போது சுட்டு விரலும், கைத்தலமும் சிறிது பின்னர் சாய்ந்து அச்சுறுத்தும் தன்மையை உணர்த்துவதாக அமையும் என்பது பார்த்தவருக்கு அச்சத்தை உருவாக்கும்.என்பது போன்ற அறிய தகவல்கள் இவ்வியலில் விவரிக்கப்பட்டுள்ளது. சின்ன முத்திரைக்குள் எவ்வளவு நுட்பங்கள், வேறுபாடுகள் என வியக்கும் வண்ணம் இவ்வியல் அமைந்துள்ளது.

தாராசுரம், ஐராவதீசுரம் சிற்பங்களில் ஆடல் மகளிரின் அபிநயங்கள்

அபிநயமானது, பார்ப்பவர் மனதில் மகிழ்வு ஏற்படக்கூடிய விதமாக உடலையும் அதன் உறுப்புகளையும் வளைத்துக் காட்டும் ஒரு முயற்சியாகும். கை அபிநயங்கள் - ஒற்றைக்கை அபிநயம் (பிண்டி) இரட்டைக்கை அபிநயம் (பிணையல்) நிருத்தக்கை அபிநயம் என மூவகையாகும். நாட்டிய நூல்களில் கூறப்படும் கை அபிநயங்களும் சிற்பங்களால் உருவாக்கப்படும் நடனச் சிற்பங்களுக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. அவ்வகையில் ஐராவதீச்சுரம் ஆடல் சிற்பங்களில் அனைத்து அபிநயங்களையும் காணலாம்.

ஆண் கைகளுக்கான 9 முத்திரைகளும், பெண்கைகளுக்கான 8 முத்திரைகளும், அலிக்கைகள்கைகளுக்கான 6 முத்திரைகளும், பொதுக்கைகள்கைகளுக்கான 9 முத்திரைகளும்,இரட்டைக்கைகளுக்கான 15 முத்திரைகளும் என 47ம், பதாகம் 5 வகை, மண்டலம் 5, அர்த்தபதாகம் 7, இரட்டைக்கை 8 என 25ம் மொத்தம் 72 முத்திரைகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

கோயில்களில் சிற்பங்களைக் கண்டுகளிக்கும் பொழுது நுட்பமாக அவற்றின் ஆடல் முறைகளையும் கை அசைவுகளையும், நாட்டிய முத்திரைகளையும் அவை விளக்கும் பொருளையும் புரிந்து கொண்டு ரசிக்கவும், வழிபடவும் முடியும். அந்தளவிற்கு மிக நுட்பமாகவும் தெளிவாகவும் இந்நூலில் கை முத்திரைகளும் அவை அமைந்திருக்கும் விதமும் விளக்கப்பட்டுள்ளன.

சிற்பங்களில் பெரிய புராண நிகழ்ச்சிகள்

இராச ராசேச்சுரம் கோயிலில் உள்ள கருவறையின் புறச்சுவர்களில் திருத்தொண்டத்தொகையடியார்கள் தங்களின் இல்லற, துறவற வாழ்வில் ஏற்பட்ட சோதனைகளை வென்று வீடுபேறு பெற்ற காட்சிகள் சிற்பமாக்கப்பட்டுள்ளன.

மெய்பொருள் நாயனார் சிற்பம்வலமிருந்து இடம் முத்தநாதன், மெய்ப்பொருள் நாயனாரை மறைத்திருந்த வாளை உருவி குற்றுதலும், வாளுடன் வந்த தத்தனை “தத்தா நமர்” எனக் கூறி வலக்கையால் தடுத்தலும், இறைவன் அம்மையப்பராய் காட்சியளித்தலும் சிற்பமாக உள்ளது. இதன் மூலமாக நாயன்மார்களின் முக்கிய நிகழ்வுகளின் வழியாக அவர் தம் பக்திச் சிறப்பையும், அவர்கள் மீது இரண்டாம் இராசராசனுக்கு இருந்த அளவற்ற பற்றினையும் விளங்கிக் கொள்ள முடிகிறது. இதன் வழி பெரிய புராண நாயன்மார்களின் வரலாறு நம் கண் முன்னே விரிகிறது. கருவறையின் சுவர்களில் திரு தொண்டத்தொகையடியார்களின் வாழ்கை வரலாறுகளை ஓவியமாக தீட்டியிருப்பதன் வழி சோழர்களின் பக்தியையும் நாயன்மார்களின் வரலாற்றை அவர்கள் போற்றியமையும் புரியும். இக்கோயிலில் அமைந்துள்ள நாயன்மார் சிற்பங்கள் யாவும் அடியாரை மட்டும் குறிப்பிடும் முறையில் தனித்திருவுருவமாக அமைக்கப்படாமல் அத்திருத்தொண்டரது சிறப்புக்குரிய வாழ்க்கை நிகழ்வு இடையே அவ்வடியாரை குறித்துக் காட்டும் முறை வரலாற்றுச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன 63

நாயன்மார்களின் சிறப்பை விளக்கும் இச்சிற்பங்கள் அந்தந்த வரலாற்று நிகழ்வுடனும், சிற்பங்களில் எச்செய்தியை நமக்கு உணர்த்துகின்றன என்பவையும் மிகத் தெளிவாக இவ்வியலில் விளக்கியுள்ளார். இது நூலாசிரியரின் ஈடுபாட்டையும், உழைப்பையும், முயற்சியையும் காட்டுவதாக அமைகிறது.

நாட்டுப்புற நிகழ்த்து கலைகளும் சிற்பங்களின் நுணுக்கங்களும்

இறையுருவங்கள் மற்றும் புராண இதிகாச சிற்பங்களைப் போல நாட்டார் வழக்காற்றில் சிற்பங்களும் கோயில்களில் இடம் பெற்றுள்ளன. இச்சிற்பங்கள் நாட்டுப்புறக் கதைகளை அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்டுள்ளன.

ஆடு மேய்ப்பது போன்ற காட்சியும், ஒருபுறம் அறுவடை செய்து கொண்டிருப்பதாகவும், மறுபுறம் இரு ஆண்கள் மல்லுக்கட்டிச் சண்டையிடுவதாகவும் சிற்பங்கள் உள்ளன. தலைமேல் வைக்கோல் அல்லது நெற்கட்டுகளைச் சுமந்து செல்வது போன்ற சிற்பமும், இறைவனை வழிபட்டு ஆடும் ஆடல் போன்ற சிற்பங்களும் அழகுற அமைக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் அட்டைப் பகுதியை அலங்கரித்துள்ள பெரிய சிற்பம் ஒரே தலையின் முகத்தோற்றத்தில் இரண்டு மிருகங்களின் உடல் உருவங்கள் காணப்படுகின்றன.

1. யானையின் உடலை மட்டும் மறைத்தால் அந்த ஒரே தலையின் முகத்தோற்றத்தில் பசுவின் பொலிவான உருவம் அழகாகத் தெரியும்
2. பசுவின் உடலை மட்டும் மறைத்தால் அந்த ஒரே தலையின் முகத்தோற்றத்தில்யானையின் உருவம் தெரியும் இரண்டு மிருகங்களை மாறி மாறி காணுகிற அதிசய சிற்பம் இங்குதான் முதலில் செதுக்கப்பட்டுள்ளது என்னும் செய்தி வியப்பின் உச்சமாகும். நம் பண்பாட்டையும், சிற்ப மரபையும் வருங்காலத் தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் இச்சிற்பங்களை பாதுகாப்பதுடன் அதன் நுட்பங்களை இத்தலைமுறையினர் அறிந்து கொள்ள உதவும் ஆவணமாக இந்நூல் விளங்குகிறது.

இவ்வாறு தாராசுரம் ஐராவதீச்சுரம் சிற்பங்களின் அழகும், நுட்பமும், அவை அமைந்துள்ள விதம், அதை உருவாக்கிய சிற்பிகளின் திறன், கலைகளின் மீதும், சிற்பங்களின் மீதும், இராச இராசேச்சுவரன் கொண்டுள்ள ஆழமான ஈடுபாடும், ஆர்வமும் நம்மை மெய் சிலிர்க்க வைக்கின்றன. இக்கோயிலை நேரில் சென்று பார்த்தால் கூட இவ்வளவு நுட்பமாக நம்மால் பார்க்க இயலாது. கோயிலின் ஒவ்வொரு அங்குலத்தில் இருக்கும் சிற்பங்களின் நுட்பங்களை முனைவர் ஜே. ஆர். இலட்சுமி அவர்கள் ஆராய்ந்துள்ள விதம் போற்றுதலுக்குரியது இந்நூல் வழி ஐராவதீச்சுரம் கோயில் சிற்பங்களின் சிறப்பை உணர்ந்து போற்றுவோம்.

இத்தகைய பெருமைக் குரிய சிற்பங்கள் கால ஓட்டத்தில் அழிந்துவிடாமல் காப்பது நம் அனைவரின் கடமை.

அடிக் குறிப்புகள்

1. சோழர் வரலாறு. டாக்டர். மா. இராசமாணிக்கனார் பக் - 3
2. தாராசரம் சிற்பம் தலவரலாறு - விக்கிபீடியா
3. சோழர் வரலாறு. டாக்டர். மா. இராசமாணிக்கனார் - முன்னுரையில் K.A நீலகண்டசாஸ்திரி.

### ஆய்வுக்கு உதவிய நூல்கள்.

1. சோழர்வரலாறு. டாக்டர். மா. இராசமாணிக்கனார்.
2. கங்கை கொண்ட சோழபுரம். மா.சந்திர மூர்த்தி - ஆ. கோகுலகண்ணன்.
3. தமிழக வரலாறும் ஆட்சியும். - டாக்டர்.மா.இராசமாணிக்கனார்.